# லயோலா கல்லூரியில் 3172 மாணவர்களுக்கு பட்டம்: சென்னை பல்கலைக்கழக துணைவேந்தர் கவுரி வழங்கினார்




சென்னை, மார்ச்.22– லயோலா கல்லூரியின் 93வது ஆண்டு பட்டமளிப்பு விழா கல்லூரி வளாகத்தில் பெர்ட்ராம் அரங்கில் நடைபெற்றது. சென்னை பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் கவுரி தலைமை விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கினார்.

இக்கல்லூரியின் ரெக்டர் பிரான்சிஸ் சேவியர் வரவேற்றார். கல்லூரி செயலர் டி.செல்வநாயகம் பங்கேற்றார்.

கல்லூரியின் முதல்வர் ஏ. தாமஸ் கல்லூரி ஆண்டு அறிக்கையை வாசித்தார். துணை முதல்வர் மேல் சியாஸ் நன்றி தெரிவித்தார். பல்வேறு துறைகளின் டீன்கள் மற்றும் துறைப் பிரிவு தலைவர்கள் விழாவில் கலந்து கொண்டனர்.

இந்த விழாவில் சென்னை பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ். கவுரி பேசுகையில், 21ஆம் நூற்றாண்டில் திறமைகள் அனைத்தையும் லயோலா கல்லூரி மாணவர்கள் கற்று பயிற்சி பெற்று வேலை வாய்ப்பு தகுதியை வளர்த்துக் கொள்ள வேண்டும். புதுமை மற்றும் தொடர்ந்து மேம்படுத்துதல் ஆகிய காரணங்களால் மட்டுமே வேலைவாய்ப்பில் ஒருவர் வெற்றி பெற முடியும். ஒவ்வொரு தேவைக்கும் பன்னோக்கு முறையில் அதை திட்டமிட்டு அதை வெற்றி பெற செயல்படுத்த வேண்டும். கல்வியில் ஆராய்ச்சி மேம்பாடு, அதுவே அதிக வேலைவாய்ப்பை பெற்று கொடுக்கும். தாய் மொழிக் கல்வி மேலும் மேலும் உயர்வதற்கு ஊக்கமாக இருக்கும் என்றார்.

இக்கல்லூரிக்கு மத்திய அரசின் கல்வி அமைச்சகத்தின் தேசிய கல்வி நிறுவனங்களின் கட்டமைப்பு சார்பில் இந்தியாவில் தலைசிறந்த கல்லூரிகளில் ஒன்றாக இந்த கல்லூரி தேர்வு செய்யப்பட்டது. இதற்காக சிறப்பாக செயல்பட்ட இதன் ரெக்டர், செயலர் மற்றும் முதல்வர், துணை முதல்வர் மற்றும் பல்வேறு துறைகளின் தலைவர்கள் மாணவர்கள் அனைவரையும் பாராட்டுகிறேன் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த விழாவில் இந்த ஆண்டு தேறிய 4 ஆயிரத்து 344 மாணவர்களில் 3 ஆயிரத்து 172 மாணவர்களுக்கு பட்டங்களை சென்னை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் எஸ். கவுரி வழங்கினார். 69 சாதனை மாணவர்களுக்கு தங்கப் பதக்கங்களை வழங்கினார். கொரோனா வைரஸ் பரவல் காரணமாக இந்த பட்டங்கள் இதர மாணவர்களுக்கு இதே வளாகத்தில் வழங்கப்பட்டது. இதில் 2 ஆயிரத்து 597 பேர் பட்டப்படிப்பு, 542 பேர் மேல்பட்ட படிப்பு, 51 மாணவர்கள் எம்.பில் படிப்பும் படித்து தேர்வு பெற்றுள்ளனர்.

இதில் 718 மாணவர்கள் வேலைவாய்ப்பு பெற்றனர். 106 பேர் சுயமாக சொந்த தொழில் துவங்கியுள்ளனர். 926 மாணவர்கள் மேல் படிப்பு படிக்கின்றனர்.